JUDICIAL FORM NO.53
{See Rule-42}

DEPOSITION OF WITNESS

(CHATPTER XXIII CRPC).

IN THE COURT OF JUDICIAL MAGISTRATE COURT, TENKASI.

| | | |
|---|---|---|
| Calendar | } | |
| Miscellaneous | } | Case No : - CC// 14/2015 |
| | : | Prosecution P.W - 2 |
| NAME | : | ஜேசு |
| FATHER'S NAME | : | |
| VILLAGE | : | |
| TALUK | : | |
| CASTE | : | |
| CALLING | : | |
| RELIGION | : | |
| AGE | : | |

Solemnly affirmed in accordance with the provision of the oaths Act,1969 (Central Act 44 of 1969) on the Tuesday 17.02.2026.

**முதல் விசாரணை**

நான் தற்போது திருமலாபுரத்தில் குடியிருந்து வருகிறேன். நான் எலக்ட்ரிசியனாக வேலை செய்து வருகிறேன். ஆஜர் எதிரியை எனக்கு தெரியும். எங்கள் ஊர்க்காரர். அசா.1 அந்தோணி எங்கள் ஆலயத்தின் பங்கு தந்தை. கடந்த 09.04.2013 ம் தேதி காலை 7 மணியளவில் நான் அசா.1 மற்றும் செல்வராஜ் ஆகியோர்கள் மலைமேல் உள்ள லூர்து மாதா ஆலயத்திற்கு சென்றோம். கோவிலுக்கு பின்னால் உள்ள கெவியில் ஒரு மாதா சிலை இருந்தது அன்றைய தினம் நாங்கள் சென்று பார்த்த போது கெபியில் சிலை இல்லை. நாங்கள் தேடி பார்த்த போது பக்கத்தில் தென்புறமாக கீழே மாதா சிலை, சிலையின் கை உடைந்து கிடந்தது. பின்னர் காவல்நிலையம் சென்று புகார் கொடுத்தோம். ஆஜர் எதிரியின் மீது சந்தேகம் அடைந்து அவர் மீது புகார் கொடுத்தோம். மாதா சிலையில் உடைந்திருந்ததால் எங்களின் மதத்தின் நம்பிக்கையை அவமானப்படுத்துவது போல் இருந்தது. போலிசார் என்னை விசாரித்தார்கள். **<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

ஆஜர் எதிரி எனக்கு உறவினர் என்றால் சரிதான். அவர் எங்கள் சபையில் உள்ளவர். வரியை ஒழுங்காக செலுத்தி விடுவார். பொதுவாக சபைக்கு எப்போது செல்வோம் என்றால் எப்போது வேண்டுமானாலும் செல்வோம். மற்றநேரத்தில் ஆலயத்தில் ஆள் இருப்பார்களா என்றால் சர்ச்சுக்கு வருபவர்கள் இருப்பார்கள். எப்போதும் சபைக்கு ஆள் வருவதால்

கண்காணிப்புக்கு ஆள் இருக்கும் என்றால் இருக்கும். சொரூபம் வலுவானது என்றால் சரியல்ல, மாவால் செய்தது. சிலையை உடைத்தால் சத்தம் கேட்குமா என்றால் கேட்காது. நாங்கள் போய் பார்க்கும் போது சிலை இல்லை. நாங்கள் தேடி பார்த்த போது சிலை கிடந்ததை பார்த்த பின் காவல்நிலையத்திற்கு தகவல் சொன்னோம். 8.30 மணிக்கு காவல்நிலையத்திற்கு தகவல் சொன்னோம். நானும், அசா.1, செல்வராஜீம் காவல்நிலையத்திற்கு சென்றோம். ஆஜர் எதிரி மீது எவ்வாறு சந்தேகம் வந்தது என்றால் ஊர் மக்கள் சேர்ந்து சொன்னதால் சந்தேகம் வந்தது.

ஆஜர் எதிரி மீது புகார் கொடுத்த பின்பு அவரை சபையில் இருந்து நீக்கவில்லை அவரது குடும்பத்தினர் எப்போதும் போல் தான் சபைக்கு வருகிறார்கள் என்றால் சரிதான். ஆலயத்தில் உள்ள வரிதாரர்களுக்கும், ஆஜர் எதிரி குடும்பத்தினருக்கும் முன்விரோதம் கிடையாது என்றால் சரிதான். சிலை யார் உடைத்திருப்பார் என பாதர் கேட்டவுடன் நான் சொன்னேனா என்றால் சொன்னேன். நான் சொன்ன உடன் செல்வராஜீம் எதிரி தான் உடைத்திருப்பார் என உறுதி செய்தாரா என்றால் ஆமாம். காவல் ஆய்வாளர் என்னை விசாரித்தார். எழுதி இருந்ததில் என்னிடம் கையெழுத்து வாங்கினார்கள் என்றால் ஆமாம். எனக்கும், ஆஜர் எதிரிக்கும் இருந்த மனக்கசப்பை பயன்படுத்தி ஆஜர் எதிரி தான் உடைத்திருப்பார் என நான் சொல்லி உள்ளேன் என்றால் சரியல்ல. பாதர் கொடுத்த புகாருக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

சம்பவ சமயத்தில் பராமரிப்பு வேலை நடந்து கொண்டிருந்ததா என்றால் ஆமாம். சம்பவத்தன்று நடக்கவில்லை. பராமரிப்பு வேலை என்பது எல்லா வேலையும் சேர்த்து பார்த்தார்கள். நான் சொன்ன நாள் நேரத்தில் சொன்ன விதத்தில் எந்த சம்பவமும் நடைபெறவில்லை என்றாலும் நான் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் எதிரிக்கும் இந்த வழக்கிற்கும் எந்த சம்பந்தமும்இல்லை என்றாலும் சரியல்ல.

Typed down to my dictation in my presence and hearing and under my personal direction and superintendence and interpreted to the witness in the presence of the accused and admitted by the witness to be correct.

//Sd//– Tmt.S.Muthulakshmi
Judicial Magistrate,
Tenkasi

JUDICIAL FORM NO.53
{See Rule-42}

DEPOSITION OF WITNESS

(CHATPTER XXIII CRPC).

IN THE COURT OF JUDICIAL MAGISTRATE COURT, TENKASI.

| | | |
|---|---|---|
| Calendar | } | |
| Miscellaneous | } | Case No : - CC// 14/2015 |
| | : | Prosecution P.W - 1 |
| NAME | : | அந்தோணி |
| FATHER'S NAME | : | |
| VILLAGE | : | |
| TALUK | : | |
| CASTE | : | |
| CALLING | : | |
| RELIGION | : | |
| AGE | : | |

Solemnly affirmed in accordance with the provision of the oaths Act,1969 (Central Act 44 of 1969) on the Tuesday 17.02.2026.

**முதல் விசாரணை**

நான் தற்போது பாளையங்கோட்டையில் குடியிருந்து வருகிறேன். நான் ஆலயத்தில் பங்குதந்தையாக பணி செய்து வருகிறேன். ஆஜர் எதிரியை எனக்கு தெரியாது. கடந்த 09.04.2013ம் தேதி சேர்ந்தமரம் ராயப்பர்சின்னப்பர் ஆலயத்தில் நான் பங்குதந்தையாக வேலை பார்த்த போது என்னுடைய பங்கு எல்கைக்கு உட்பட்ட திருமலாபுரத்தில் புனித லூர்து அன்னை திருத்தலத்தில் வழக்கம் போல கோவிலில் வழிபாடு செய்ய காலை 7மணிக்கு நான் வந்தேன். என்னுடன் என் சபையை சேர்ந்த திரு.செல்வராஜ், திரு.சேசு வந்திருந்தனர். நான் ஆலயத்திற்கு அருகே உள்ள கெபிக்கு சென்று பார்த்த போது கெபியில் மாதா சொரூபம் இல்லை, அதை தேடி மலையிலிருந்து பின் பக்கமாக பாதையில் தேடி சென்ற போது இடது பக்கமாக மாதா சொரூபம் உடைந்து கிடந்தது. யார் அவ்வாறு செய்தார்கள் என்று எனக்கு தெரியாது. நான் ஊரில் விசாரித்த போது சவரிமுத்து செய்திருக்கலாம் என்று என்னிடம் சொன்னார்கள். அவர்கள் சொன்ன அடிப்படையில் நான் காவல்நிலையம் சென்று புகார் மனு கொடுத்தேன். என்னிடம் காட்டப்படும் புகார் மனு நான் கொடுத்தது

தான். அதில் இருக்கும் கையொப்பம் என்னுடையது தான் மேற்படி புகார் மனு அசாஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது. மாதா சொரூபத்தை உடைத்திருந்ததால் அது நம்பிக்கையை மற்றும் மத உணர்வினை புண்படுத்துவது போல் இருந்தது. போலிசார் என்னை விசாரித்தனர்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

சேர்ந்தமரம் புனித ராயப்பர் சின்னப்பர் ஆலயத்தில் 2009 லிருந்து 2014 வரை வேலை பார்த்தேன். அதனால் அந்த ஊரில் உள்ள எல்லாரையும் எனக்கு தெரியும் என்றால் தெரியும். ஆஜர் எதிரி எங்கள் சபையை சார்ந்தவர். சேசு செல்வராஜ் வழக்கமாக என்னுடன் வருவார்களா தனியாக போவார்களா என்றால் வழக்கமாக தனியாக போவார்கள். அப்போது திருவிழா முடிந்த சமயம் என்பதால் ஒன்றாக என்னுடன் வந்தார்கள். ஜேசு செல்வராஜ் திருமலாபுரத்தை சார்ந்தவர்கள். கெவி மாதா சொருபத்தை காணும் என்று முதலில் யார் பார்த்தார்கள் என்றால் நான் தான் பார்த்தேன். அந்த தகவலை முதலில் யாரிடம் சொன்னேன் என்றால் நாங்கள் மூவரும் சேர்ந்து சென்றதால் எங்களுக்குள் பேசிக்கொண்டோம். சொரூபத்தை காணவில்லை என்ற உடன் திருடி இருப்பார்கள் என்று நினைத்தேனா உடைத்திருப்பார்கள் என்று நினைத்தேனா என்றால் திருடி இருப்பார்கள் என்று நினைக்கவில்லை.

சொரூபத்தை காணவில்லை என்ற உடன் என்னுடைய தலைமைக்கு தகவல் சொல்லவில்லை என்றால் சொல்லவில்லை. உடனே காவல்துறைக்கு தகவல் கொடுக்கவில்லை என்றால் உடனே சொல்லவில்லை. ஊரில் உள்ள பொதுமக்களிடமும் உடனே சொல்லவில்லை என்றால் சரிதான். மலையை ஒட்டி கீழேஇறங்கும் பாதையில்இடது பக்கத்தில் உடைந்த சிலை கிடந்தது. சொரூபம் இருந்த இடத்தை சுற்றி கதவோ, பாதுகாப்போ கிடையாது என்றால் சரிதான். சொரூபத்தை மாடு கூட முட்டி சாய்த்திருக்கலாம் என்றால் வாய்ப்பில்லை. ஒரு நபர் சொரூபத்தை அசைக்க முடியாது என்றால் சரியல்ல. எந்த நபர் சவரிமுத்து உடைத்திருப்பார் என சொன்னதாக என்னுடைய புகாரில் சொல்லவில்லை என்றால் சரிதான். மாதா சொரூபத்தின் எந்த பகுதி சேதமடைந்தது என குறிப்பிட்டு புகாரிலும், முதல் விசாரணையிலும் சொல்லவில்லை என்றால் சரிதான். சேதபடுத்தப்பட்ட சிலையின் மதிப்பு சொல்லவில்லை என்றால் சரிதான். அதன் மதிப்பு தெரியாது என்றால் சரிதான். சேசுவும், செல்வராஜீம் எனக்கு கீழ் உள்ளவர்கள் என்றால் சரிதான்.

மீண்டும் சிலையை அதே இடத்தில் நிறுவுனோமா

என்றால் இல்லை. யூகத்தின் அடிப்படையில் தான் புகார் கொடுத்தேன் என்றால் ஊரில் உள்ள நபர்கள் யூகித்து சொன்னதின் அடிப்படையில் நான் கொடுத்தேன். சம்பவம் நடந்து இரண்டு மணி நேரம் கழித்து காவல்நிலையம் சென்றேன். ஆய்வாளர் என்னை விசாரித்தார். ஆய்வாளர் விசாரணையில் யார் சிலையை உடைத்தார் என்று தெரியவில்லைஎன்றும் யூகத்தின் அடிப்படையில்சொன்னதாக சொன்னோமா என்றால் சொன்னோம். நான் சொன்ன நாள், நேரத்தில் சொன்ன விதத்தில் சிலையை எதிரி உடைக்கவில்லை என்றாலும் காவல்துறை சொன்னதன் அடிப்படையில் எதிரி மீது புகார் கொடுத்தேன் என்றாலும் சரியல்ல. நான் கொடுத்த புகாருக்கு ஆதரவாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் எதிரிக்கும் வழக்கிற்கும் சம்பந்தம் இல்லை என்றாலும் சரியல்ல. எதிரியை யார் என்று தெரியாத நிலையில் புகாருக்காக நான் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

Typed down to my dictation in my presence and hearing and under my personal direction and superintendence and interpreted to the witness in the presence of the accused and admitted by the witness to be correct.

//Sd//– Tmt.S.Muthulakshmi
Judicial Magistrate,
Tenkasi